609

ஸ்ரீ

நடுநாட்டுத் திருப்பதிகளுள்

ஒன்றாகிய

திருக்கோவலூரில்

விளங்கும்

# ஸ்ரீ பூங்கோவல் வல்லித்தாயார்

## ஸ்தோத்ரம்

அன்னாளடியார்க் கடியன்

பாடியது.

கலாரத்னாகரம் அச்சுக்கூடம்,

சென்னை.

http://acharya.org

Q25 : 211 TR
N19
17979



ஸ்ரீ பூங்கோவல் வல்லித்தாயார்.

http://acharya.org

ஸ்ரீ

## பாயிரம்.

அரு மறை முடியி னணி யென விலகல்
வொருதனி முதலி னுர முறை மலரான்
கருணை யின் வழியுட் கசடற மொழியும்
திரு நாவரியின் தெருளிசை யிதுவே.

http://acharya.org

## நூல்.

### எண்சீர்விருத்தம்.

உலகமெலாந் திருவுள்ள மூற்ற வாறே
　　உண்டாக்கிக் காத்தொழிக்கு நாத னேனும்
இலகுமவன் திருமார்பி லுறையு மந்த
　　இந்திரையி னிங்கிதத்தை யனுச ரித்தே
அலகிலவாம் விளையாட்டா யவள்க ளிப்ப
　　அமைத்துள்ளா னச்சுதனே; மெச்ச மந்தத்
தலைமையுறு மெந்தாய்ப்பூக் கோவல் வல்லி
　　தந்தருளு மங்களங்கள் நமக்குத் தானே.

http://acharya.org

அகிலபுவ னங்களுக்கு மன்னை யாமெம்
அலர்மலரா லயவல்லி! புனைத்துதிப்பேன்
தகைமையுறு தருவாக்கும் பொருளு மொன்றத்
தங்குமிசை தந்தடியேன் சிந்தைதன்னை
வகையுடனின் வசமாக்கி, வைக்கு வேனை
மனங்களிப்பித் தருள்புரிவாய்; வல்வினையேன்
அகலவொரு இலக்காக அமைந்து ளேனின்
அருளாழிப் பெருக்கலையின் திவலைக் கார்ந்தேன்

http://acharya.org

ஸ்தோத்திரமென் பதுதானென் ? சொல்லி மக்கு
  தொடுத்தில்லாக் குணமாலை சூட்டலாயின்
சாத்தியமுன் விடமாகா தெக்குணந்தான்
  சார்ந்திலதுன் னோத்தமுனி யஃதிலாமே
சாத்திரத்தின் படிப்பலவாய்த் தழைத்திலங்கத்
  தகைமையுறு முனது குண சாகரத்தைச்
சூத்திரமா யுள்ளபடி முகத்த லாயிற்
  றொன்மறைபோற் சகுருவுந் தளர்கு வாளே.

http://acharya.org

வாக்கினுக்கு மனத்தினுக்கு மெட்டிடாத
    வகைகொண்ட இன்னமுத குணமெலாமென்
நாக்கினினீர் சுரப்பதனை நீர வெண்வாய்
    கவிலகனி நாடுமிதி லில்லையென்போர்,
ஏக்கமுறதல்; சாத்தியமே யில்லை யெனும்
    இந்நவினிற் சந்திரிகை யெல்லாங் கூட்டிப்
போக்கியமாய்ப் பருகிடச்செய் கோரிப்புள்ளும்
    பூக்கோவல் வல்லிவாய் பூட்டாதாமே.

http://acharya.org

ஆசையிலே னன்புமிலே ஞன்பா லன்றூப் !
    அதிவிலஞு புன்பணியி லமரே னேனும்
பேசரிதாம் புகழ்பெற்றுத் தூயதாமுன்
    பேரின்பப் பெருக்கென்னுங் குணத்தை யென்றன்
மாசுறுவா யாஸ்வழக்க எனக்கோ ரச்சம்
    மானமிலை யில்லலைர கதியை காயும்
ஆசையுட னக்கவதன் தர்பமாற்றும்
    ஆற்றினது பரிசுத்தம் குறைத்தி டாதே.

http://acharya.org

வேறு.

சீராரு முன்கொழுநன் புருடோத்த மன்னுநி சேடன் சிறந்த வணையாம்
செப்பிலுன் ஞஸகம் வாகனத்திகழ்வேத மூல வுயிர்வ யினதேயன்
சாராது ளோர்க்கிச் சகந்தன்னை மோகிக்கு மாயை யதனைக் கோர்திரை
சதுர்முகன் சங்கரன் முதலான தேவர்தந் தேவியருடன் னுனடியார்
பேரானதோ வுனது பெருமை யெல்லாஞ் சுட்டும் "ஸ்ரீ" யென்பதே யாதலின்
பிரசித்த மாமறையின் பிரமாண முகமாயுன் பெருமையையுள்ளவாறே
ஆராயு ரைத்த லொரு சாத்தியம் அதினுமிக மந்தமதி யான வெளியேற்
காகுமோ வாதிபுரி யாத்திருக் கோவலூ ரல ராயா ! வன்னையே.

http://acharya.org

ஆயினும் புகழுவ னச்சமே யிலனுயு ஞுச்சரிய மகிமை யேனும்
அன்றெனிலெ நீத்தின் றுனக்கடிமை யானநிந் தன்சரன் புகலில்லையோ
ஆயிரவி தத்திலப ராதியே னுயினு மெனுதிகிலை மாதி யிலையோ
அகிலலோ கேச் வரனு மிவ்வற்பனுக் காய்த் தனுனை தனைமீறிடுவனோ
ஆயினொரு காலத்த வன் மீற வுன்னிடின் னீயவன் பாங்கரிலையோ
அன்னவனு னுதீன, னல்ல னோ வல்லனை நீயவற் காகி யிலையோ
சேயினது மழலையே யன்னையின் செவிக்கமுத நீ யெனக்கன்னை யன்றோ
செகமெலாஞ் சிறிது மதைச்சிறிது மஞ்சி லேன் தேகளீசன் தேவியே.

http://acharya.org

கண்ணிற் சிறந்தவன் செந்தா மரைக் கண்ண னுயிலு மலன் தாந்தையாம்
கமலாய்! கலப் பொன்று மில்லாத கருணையே சொரியுமுன் கண்ணிடத்தே
எண்ணிற் சிறந்திலகு மகிலசம் பத்துமே யெத் திசை யுன் விழி யேகுமென்
றெதிர் நோக்கு டன் ருமு முடனேகி முன்னேறு மெத்த னக்கொண்டிருக்
எண்ணிற் சிறந்தனிக் கருணுயிர் தந்தவிர ஏனைய உயிர்க்கு முய்யும் [கும்
இதா சாதன மொன்று மிக பரக்கட் டென்று மில்லை யாதலி னுன்னையே
திண்ணமாய் முன்னிட்டுன் தேவனைத் துதி செய்யுந் திரிபுவனமுஞ் சிறந்தே;
தேவாதி தேவனுக் கருமையா மாவியே தேகளீசன் தேவியே.

## வேறு.

இன்றே சுதினம் மெளியே னித்யத்
 திருள்போ யொளி யொன்று புகுந்தளதால்
என்றேனு மிதன் மு னுணர்ந் திலனிவ்
 வீடேறு மகோற் சவமென் மனதே
இன்றென் தனியே னென்னைத் தருகி
 னெசாத்திதன் நினைவூட்டி னன்காண்
ஒன்றேயென நின் றவன் மார்பிலவற்
 குயிரா மலரா லயவுத்தமியே.

http://acharya.org

11

பாலாழி கொலோ பரமன் பதமோ
பதுமா மதுபா யரவிந்தமதோ
மாலாக மதோ சனகன் தசரத
மணிமா நகரின் திருமா ளிகையோ
நாலா ரணவான் முடிதா னதுவோ
கனிவி யெளியேன் மிசைவாஞ்சையுடன்
கோலா கலமா யொருகோ யிலினைக்
குடிகொள்ள வமைத் தரு ளென்மனமே.

http://acharya.org

உன்னுதனை யஞ்சி யுனைச்சரணு
    யுறுவோர் முறையீடுகளுக்குருகி
அன்று னருளின் பிரசாத மதை
    அபராத மறந்த வருக் குதவி
இன்னுரிதயத்தனையும் முறையே
    இலகும் பரிபா லமுறக் கொளுவாய்
அன்னை யடி யோங் கடமைக் கமுதே
    அருளேவடி வா யெமர்க் தலனே.

http://acharya.org

பெரிதே யெனினுஞ் சிறிதே யெனினும்
பிரபஞ் சமதற் குறு பாக் ய மெலாம்
வரதே வதையா மலரா லய நின்
மலரம் பக வீட் சிய மென் பரிதைக்
கருதே மொரு வித் தை யெனக் கமலாய் !
கமலா னன கா ரண நா ரணனே
விருதேத் துமவன் விபவங்க ளுமுன்
விழியால் விளையும் மென மெச்சவனே.

http://acharya.org

## வேறு.

சுந்தரனுமுன் றுணைவனுக்குற்ற
வைபவமகிலமு முன்னும்
லத்தன வெள்ளி லன்னவன் மகிமை
மழுங்குமோ வெய்யிதமேனும்
இந்திர நீல விரத்தினத் தின்க
ணிலகுநீ ரோட்டமே யதற்குத்
தந்திடு மேற்ற மென்னிலம் மணிக்குத்
தனிமையுந் தாழ்வையு முளதோ.

http://acharya.org

## வேறு.

மாதே மலரா லயமா தவனுன்
    மணி மாக் தமதித்தி லனியு மிலாய்
ஏத்தே ஐமுலோ பமதுண்டு கொலல்
    வெல்லா மதி பே ரதி வித் திதுதான்
யாதே யெனிதுன் னனயா வுமதிக்.
    இல்லா தன வற்றி லொரஞ்சு தையாம்
மீதாமரை கம்பு மலர் மதிதான்
    மிதமிஞ்சி மயங்கியபே யதிவே.

http://acharya.org

## வேறு.

முன்னோன் முகுந்தன் பணி மூன்ற மைத்தன்
முகமாயளித்த லதேனும்
தன்னாணை தன்னை வகையாய்ச் செலுத்தச்
சங்கற்ப மூற்ற தகையால்
அன்னா யமர்ந்த மலரா லயாநின்
னாதினை மாகி யுளனால்
உன்னா யகன்கொள் விரதத்தை யுன்னி
யுலகத்த ழைப்பவருளே.

http://acharya.org

தன்னோக்க மின்றி யுதவா னெவர்க்கு
முன்னாதி னாதி பகவன்
முன்னோக்கமுர்ற சரிதந் தெரிந்தான்
முகநோக்கி நின்ற தறிவாய்
தன்னோக்கிழந்த காகத்தை நோக்கி
காலேந்து நயனமுடை யோன்
றன்னோக்கமுற்ற தசை நோக்கி நின்றும்
யாரே யுன்ற கைமை யறியார்.

http://acharya.org

18

பாலாழிதன்னி லவதாரஞ் செய்த
பாவாயு னமுத மொழியை
மாலானமாய னெவ்வாறு கேட்டு
மதியா திருப்பனு ரையாய்
காலானடந்து வனமேக கின்ற
காலத்தருளாது சொலையே
மேலானதாக உன்னோடு மெச்சி
விரிகானடந்து முளனுல்.

http://acharya.org

அருளேதிரண்டோர் வடிவா யமைந்த
அலராலயா வனதிபன்
கருணுயிர் தத்தின் கடலா மெமீசன்
கயலானனத்த னெனிலும்
இருளை நிறைந்து வினை யான் மெலிந்த
எளியே மவன் முன் தனியே
அருளேற்ப வஞ்சி நின்றேற முன் முன்னர்
அன்னையே யெமக்குன் றுணையே.

http://acharya.org

வாயாலுங் காய மதனாலுமாய
மனதாலுந் தூய்மை யிலனிப்
பேயான மாயப் பிரபஞ்ச வாழ்க்கை
பெருவாழ்க்கை யென்றுமதியா
தோயாதுகொண்ட நோயால் வருந்தி
உனையின்றடுத்த முறையால்
தாயான நீ யித்தனியாமுன் சேயைத்
தயையாலணைத்தன் முறையே.

http://acharya.org

## வேறு.

வீட்டினைவிட்டு வெளிப்பட வந்துளம்
　　வீண் விளையாட்டின நேரம்
ஊட்டிவளர்த்த வெ மன்னை யுணர்த்து
　　முருகிய சிந்தை யுளாய்
வாட்டமுகத்துட னஞ்சி வருந்தி யெம்
　　வரவினை யெதிர் நோக்கும்
ஓட்ட மெடுத்தவ டாள் களைத்திட
　　ஓடுதும் வா மனனே.

http://acharya.org

அண்டிக மன்னையி னெக்குறுமுன்ன
மாற்ற னமக்கையும்
தொண்டை விரித்திடத் தூர்க்குறி கொண்டத்
துயரம் வெளிப்படவே
கண்டது கங்கறை யாவு மறந்துளங்
கரைந்து நமக்கருளும்
பண்டொரு பாதக காகமு முய்ந்திடப்
பணிவிலன் வா மனனே.

http://acharya.org

நஞ்சையின் பாசினைத்து கமர்குர
னுண்டியெனப் படியா
வஞ்சனையிற்றருமைவர் பகைவர்கள்
வாலிபரேம் மயலால்
விஞ்ச மினிப்புட னுண்டது மவ்விட
வேதனை கொண்ட கமக்
கஞ்ச லெனத்தரு மன்னை மருந்தினி
தாற்றிடேம்வா மனனே.

http://acharya.org

தந்தை முனிந்திடில் தாய் பரிவாளெனைத்
 தண்ணளி கொண்டவன்முன்
விந்தைபிழையிவர் மேவின ரென்பது ?
 மேவினதும் பிழையோ ?
“ சிந்தை தகுந்தில ” தென்னலும் புன்னகை
 நிலவ வருள் புரிவான்
எந்தை தயாபர னென்பது கேட்டிலை
 யேயிதன் முன்மனமே.

http://acharya.org

தாயினு மன்பு தரித்தவர் யாவர்
சகத்துறு முயிர் கடமக்
காயினை செய் மலரா லயவல்லியொ
ரன்னையலா தெவரே
பேயெனநின்ற தொர் பிள்ளையதே பெறும்
பெற்ற வளன்பை யெலாம்
ஆயினெமை விட யாருளர் பேயர்க
ளாதலின் வா மனனே.

http://acharya.org

## வேறு.

சாது சங்க மெங்கு மங்குஞ் சங்கடங்கள் பொங்குநாள்
　　தரையிலன்று மாணிடந்தரித்துநின்ற சானகி
மாதுகௌசலை மகற் கொராவியான உன்னையும்
　　வனநடந்து போவெனுவழங்கி னொருமில்லரே
நீதுசெய்யரக்கரிட்ட சிறையறுத்த உன்னிடில்
　　தென்னிலங்கை நீ தனைத்து சிறை யிருத்தல் வேண்டுமோ
ஏது வொன்று மில்லதா முன்வாற்சலிய மென்னவோ
　　இலகு முன் தனைக் கெடுப்பு மீடு மொன்று மில்லையே.

http://acharya.org

பன்ன காச னத்து சுந்த பள்ளி தன்னை நீக்கி யிப்
பாரில் வித்தை யாயு கந்த மானி டம்ப ரிக்கினும்
மன்னவர்த மாளி கைய லங்க ரிக்க நின்றநீ
வன கடந்து வினை பிரிந்தவ் வுஞ்ச கன்வ சத்தனாய்
பன்னரும் படாத பாடரக்கிமார் கைப் பட்டுமெப்
பாவி யோர்த ரைப்ப டாத வன்ன மேப ரிந்தனை
இன்ன தென்று ணர்ந்தி லேமு னருளின் வண்ண மைதிலீ
ஏது வொன்ற மில்லை யென்னி லெல்லை தானு மில்லையே.

http://acharya.org

## வேறு.

ஆங்கார மெனு மகத்தா
மாகமத்தினளவில்லா மாசையென்னும்
பாங்கான சாகைபடர்
பலதிசையும் பரவு கிளைபற்றிப் பாய்ந்து
தூங்காமே யெப்பொழுதுந்
துயர்க்கனிக ளேதினுமென் மனக்குரங்கைப்
பூங்கோவல் வல்லியுன்
பொன்னடிக்கீழ் வசமாக்கிப் போற்றுவாயே.

http://acharya.org

## வேறு.

பொன்னினைப் பொலிவார் பூவினை ப்பூவா
லயமெனு மாரணப் பொருளைக்
கன்னலை யமுதக் கடலினை யமிழ்தைக்
கலப்பிலாக் கருணையக்கடலை
இன்னலுக் கினிய மருந்தினை நீல
எழிலியித் தெழில் தரவினையும்
மின்னினை வேண்டும் பொருளெலா முதவுங்
கற்பக வல்லியை வியப்பாம்.

http://acharya.org

மண்ணெலா மளந்த வுன் மணவாளன்
    மலரடி களு மளக் கொண்ணு
எண்ணி லென் வினைக ளாவினை யெய்ப்ப
    வளர்த்தெனை வயிரமார் விழுதாய்
மண்ணினூடு ருவ விட்டேன வன்றேழ்
    மராமர மெய்த வுன் மகிழ்நன்
கண்ணி மீட் டென்னை நன்னிலை நாட்ட
    மைதிலி நயந்தருள் வாயே.

http://acharya.org

காவெனக் காகங் கரைந்திடுங் கலியிற்
கட்டேனர் கொள் பவர் போலும்
தாவெனக் குழறுங் குழவியினுரையிற்
றாய் மனம் மகிழ்வது போலும்
பாவெனக் கொண்டிப் பசையிலார்ப் பிற்கோர்
பசுமையைத் தந்து மக்கென்றே
காவெனக்கிந்த தென்று னாயகனே
னுரைத்தெனை நயந்தருள் வாயே.

http://acharya.org